NUS National University of Singapore

**Source:** *Tamil Murasu,* p2
**Date:** 24 April 2017

# இரைச்சல் அதிகம் உள்ள இடங்கள்

சிங்கப்பூரில் பகலில் வெளிப்புறத்தில் இரைச்சல் அளவு சராசரியாக 69.4 டெசிமல் என்று தேசிய பல்கலைக்கழக ஆய்வு ஒன்று கூறுகிறது. இது குப்பை கூட்டும் மின்சாதனம் ஏற்படுத்தும் இரைச்சலுக்குச் சமமானது. தேசிய சுற்றுப்புற வாரியத்தின் பரிந்துரைக்கப்பட்ட அளவு 67 டெசிமல்தான். சிராங்கூன், புக்கிட் தீமா, கிளமெண்டி ஆகிய இடங்கள் அதிக இரைச்சல் உள்ள இடங்களில் சிலவாகும்.

இரைச்சல் சூழலிலேயே இருந்துவந்தால் காது கேட்காமல் போய்விடக்கூடும் என்று உலக சுகாதார நிலையம் எச்சரித்து இருக்கிறது.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.